# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2064/60 - 2018 අප්‍රේල් මස 01 වැනි ඉරිදා - 2018.04.01

*2064/60 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**_2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம்_**

*அட்டவணை 01 இன் விடயம் (10) இன் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியின் உப பந்தி (1) விடயம் (அ) உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 83 இன் பந்தி (1) இன்கீழ் எனக்குரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், திசாநாயக்க முதியான்செலாகே லலித் ஐவன் திசாநாயக்க ஆகிய நான், அத்தகைய கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட வேண்டிய ஏதேனும் வரி வீதங்கள் மற்றும் எவரேனும் ஊழியருக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்தான வரியினை நிறுத்தி வைப்பதற்கான சந்தர்ப்பங்களினை விதித்துரைத்து இத்தால் இக்கட்டளையினைப் பிறப்பிக்கின்றேன்.*

*ஐவன் திசாநாயக்க,*
*உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்.*

*உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,*
*கொழும்பு 02,*
*2018, ஏப்பிறல் 01.*

**ஒழுங்குவிதிகள்**

**தொழில் வழங்குநர்களினால் நிறுத்தி வைக்கப்படுபவை**

*1. **குறுந்தலைப்பும் ஆரம்பிக்குகையும்.**– இத்தகைய ஒழுங்குவிதிகள் தொழில் வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள் – 2018 இனால் நிறுத்தி வைக்கப்படுவதாக குறித்துரைக்கப்படலாம் என்பதுடன் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறான அதே நேரத்தில் பயனுறுதியாகும். (இதனகத்துப் பின்னர் சட்டம் எனக் குறித்துரைக்கப்படும்). (2018, ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பயனுறுதியாகும்.)*



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*2.* **தொழில் வழங்குநர்களினால் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய தொகை.**- *ஊழியர் ஒருவரின் தொழில் தொடர்பில் தொழில் வழங்குநருக்கு வரிமதிப்பாண்டு காலப்பகுதியொன்றில் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற தொழில் வழங்குநர் ஒருவர் பின்வருவனவற்றிற்கமைவாக அத்தகை கொடுப்பனவுத் தொகையொன்றினை நிறுத்தி வைத்தல் வேண்டும் :-*

*(அ) ஊழியத்திலிருந்து முறையான இலாபங்களினைக் கூட்டிணைக்கின்ற கொடுப்பனவாக இருப்பதுடன் ஊழியர் முதன்மை ஊழிய வெளிப்படுத்துகையினைச் சமர்ப்பித்திருக்குமிடத்து,*

**வரி அட்டவணை 01 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*மொத்தக் கொடுப்பனவொன்றினை கூட்டிணைக்கின்ற கொடுப்பனவாக இருக்குமிடத்து,*

*(அ)* **வரி அட்டவணை 02 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*(ஆ) அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் ஒரே தடவையில் கொடுப்பனவினை மேற்கொள்ளுமிடத்து, (இறுதிப் பயன்கள்),*

**வரி அட்டவணை 03 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*(ஆ) இலங்கையில் பிரசாவுரிமையினைக் கொண்டிராதவர்களினால் பெறப்பட்ட கொடுப்பனவாக இருக்குமிடத்து,*

**வரி அட்டவணை 04 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*(இ) சில சந்தர்ப்பங்களில், குறித்த சில மாதங்களில் உயர்ந்த உழைப்பூதியக் கொடுப்பனவு காரணமாக, முதன்மை ஊழியமொன்றிலிருந்து ஊழியர் ஒருவர் மாதாந்தம் முறையாகப் பெறுகின்ற இலாபம் ரூபா 100,000 இனை விடக் குறைவாகவும் ஆனால் வரி மதிப்பாண்டொன்றிலுள்ள ஏதேனுமொரு மாதம் வரையில் ரூபா 1,200,000 இனை விஞ்சுவதாகவும் இருக்குமிடத்து,*

**வரி அட்டவணை 05 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*(ஈ) தொழில் வழங்குநர் ஒருவரினால் ஊழியத்திலிருந்து அவரின் வருமானம் மீதான ஊழியரின் வரிப் பொறுப்புக் கொடுப்பனவினை அல்லது மீள்நிதியிடலினை மேற்கொள்கின்ற கொடுப்பனவாக இருக்குமிடத்து,*

**வரி அட்டவணை 06 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*(உ) முதன்மை ஊழியமொன்றின் தொழில் வழங்குநர் தவிர்ந்த வேறு எவரேனும் தொழில் வழங்குநரினால் செலுத்தப்படுகின்ற அத்தகைய உழைப்பூதியமாக இருக்குமிடத்து ஒன்றிற்கு மேற்பட்ட தொழிலில் ஈடுபடுகின்ற எவரேனும் ஊழியரின் உழைப்பூதியம் தொடர்பில் அல்லது முதன்மைத் தொழில் சான்றிதழினைச் சமர்ப்பிக்காத எவரேனும் அல்லது உபொசெவ நோக்கத்திற்காக கொடுப்பனவுப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்காத, கம்பனியொன்றின் தலைவர் அல்லது பணிப்பாளர் அல்லது நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர் ஒருவரின் உழைப்பூதியக் கொடுப்பனவுக்காக மேற்கொள்ளப்படுமிடத்து,*

**வரி அட்டவணை 07 ஏற்புடையதாதல் வேண்டும்.**

*வரி அட்டவணைகளினை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையத்தளமான* www.ird.gov.lk *இல் பார்வையிடலாம்.*

*3.* **முதன்மை ஊழியம் :**

(i) *வரி மதிப்பாண்டொன்றிற்கான ஊழியரொருவரின் முதன்மை ஊழியமானது, குறித்த ஆண்டுக்கான விடயம்* (ii) *இன் கீழ் ஊழியர் ஒருவரினால் தொழில் வழங்குநருக்கு வழங்கியுள்ள வெளிப்படுத்துகை தொடர்பான தொழிலாகும்.*

(ii) *ஊழியரானவர் மாதமொன்றிற்கு ரூபா 100,000 அல்லது வரி மதிப்பாண்டொன்றிற்கு ரூபா 1,200,000 இனை விஞ்சுகின்ற அல்லது விஞ்சுமெனக் கருதப்படுகின்ற அத்தகைய முதன்மை ஊழியத்திலிருந்து மாதாந்தம் முறையாகக் கிடைக்கப்பெறுகின்ற இலாபங்களாக இருக்குமிடத்து, ஊழியரின் முதன்மை ஊழியமாக ஊழியத்தினைக்*

குறிப்பிடுகின்ற வெளிப்படுத்துகையினைத் தொழில் வழங்குநருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். ஊழியர் ஒருவரானவர் ஊழியரின் முதன்மை ஊழியமாகக் குறிப்பீடு செய்கின்ற தொழில் வெளிப்படுத்துகையுடன் தொழில் வழங்குநருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) விடயம் (ii) இன் கீழான வெளிப்படுத்துகையானது ஊழியர் மற்றும் தொழில் வழங்குநரினால் கையொப்பமிடப்பட்டு திகதியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வரி மதிப்பாண்டுகளுடன் தொடர்புடையதாக இருக்கலாம்.

(iv) ஊழியர் ஒருவர் ஏதேனுமொரு காலப்பகுதியில் ஒன்றிற்கு மேற்பட்ட முதன்மை ஊழியத்தினைக் கொண்டிருத்தலாகாது.

(v) 4 ஆம் பந்திக்குட்பட்ட வகையில், ஊழியர் ஒருவர் வரி மதிப்பாண்டொன்றின் இறுதியில் மாத்திரம் விடயம் (ii) இன் கீழான வெளிப்படுத்துகையொன்றினை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.

**4. உடனடுத்து வரும் முதன்மை ஊழியம் :**

(i) ஊழியர் ஒருவர் வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் முடிவுறுத்துகின்ற முதன்மை ஊழியமொன்றினைக் கொண்டிருப்பதுடன் அக்குறித்த ஊழியரானவர் குறித்த முதன்மைத் தொழிலினை முடிவுறுத்தியதன் பின்னர் இன்னொரு ஊழியத்தினைக் கொண்டிருப்பாராயின், ஊழியரானவர் பின்வரும் விடயங்களினை மற்றைய தொழிலின் வழங்குநருக்கு வழங்குதல் வேண்டும் :-

(அ) பந்திய 3 இன் விடயம் (ii) இன் கீழான புதிய வெளிப்படுத்துகை ; மற்றும்

(ஆ) முன்னைய முதன்மை ஊழியம் தொடர்பில் பந்தி 7 இன் கீழ் வழங்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்.

(ii) விடயம் (i) இன் கீழான நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழொன்றினை வழங்கியுள்ள ஊழியரொருவர் 7 நாட்களினுள் குறித்த ஊழியருக்கு அச்சான்றிதழினை மீள வழங்குதல் வேண்டும் ;

(iii) வரி மதிப்பாண்டின் எஞ்சிய காலப்பகுதியில் ஊழியரொருவருக்குச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளிலிருந்து 2 ஆம் பந்தியின் கீழ் நிறுத்தி வைக்கப்பட வேண்டிய வரியினைக் கணிப்பீடு செய்யும் நோக்கத்திற்காக, புதிய முதன்மை தொழில் வழங்குனர் விடயம் (i) இனைப் பிரயோகிக்குமிடத்து -

(அ) நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்களில் விதித்துரைக்கப்பட்ட ஊழியரின் முன்னைய முதன்மை தொழிலில் இருந்தான கொடுப்பனவுகளை குறித்த ஆண்டுக்கான புதிய தொழிலிலிருந்தான கொடுப்பனவுகளுடன் சேர்த்தல்; மற்றும்

(ஆ) ஊழியரின் முன்னைய முதன்மைத் தொழில் வழங்குநரினால் நிறுத்தி வைக்கப்பட்டவாறு நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட வரித் தொகையினை ஊழியருக்குச் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து குறித்த ஆண்டு காலப்பகுதியில் புதிய முதன்மைத் தொழில் வழங்குநரினால் நிறுத்தி வைப்பதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய வரியினைச் சேர்த்தல்.

(iv) குறித்த வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட முதன்மைத் தொழில்கள் முடிவுறுத்தப்பட்டிருக்குமிடத்து -

(அ) ஊழியரானவர் விடயம் (i) இன்கீழ் பன்முக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்களினை புதிய தொழில் வழங்குநருக்கு வழங்கலாம் ; மற்றும்

(ஆ) விடயம் (iii) ஆனது பன்முக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்கள் தொடர்பில் விபரிக்கின்றது.

5. **இரண்டாம் நிலை ஊழியம்.**- ஊழியர் ஒருவரினைப் பொறுத்த வரையில், இரண்டாம் நிலை ஊழியம் என்பது குறித்த ஊழியரின் முதன்மை ஊழியம் அல்லாத வேறு ஏதேனும் ஊழியத்தினைக் குறிப்பிடுகின்றது.

**6. தொழில் வழங்குநரின் வருடாந்தக் கூற்று :**

(1) ஆணையாளர் நாயகத்திற்கென தொழில் வழங்குநர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டு கோவையிடப்படுகின்ற வருடாந்தக் கூற்றானது கீழே விதித்துரைக்கப்படும் வடிவத்தில் இருத்தல் வேண்டும் :-

(i) குறித்த ஆண்டு காலப்பகுதியில் தொழில் வழங்குநரினால் ஊழியத்தில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு ஊழியரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ;

(ii) ஒவ்வொரு ஊழியம் தொடர்பிலுமான தொழில் வழங்குநரானவர் முதன்மைத் தொழில் வழங்குநராக அல்லது இரண்டாம் நிலைத் தொழில் வழங்குனராக இருக்கலாம் ;

(iii) ஒவ்வொரு ஊழியர் தொடர்பிலும், குறித்த ஆண்டு காலப்பகுதியிலும் தொழில் வழங்குனரினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ;

(iv) கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட வரித்தொகை.

(2) முறையான இலாபங்கள் தொடர்பான பதிவேடுகள், மொத்தக் கொடுப்பனவுகள் அல்லது ஏனைய விபரங்கள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான அட்டவணைகளில் வழங்கப்படுதல் வேண்டும் ;

(3) அட்டவணையொன்றில் 20 இற்கு மேற்பட்ட பதிவுகள் காணப்படும்போது அட்டவணைகள் இலத்திரனியல் சேவைகளினைப் பயன்படுத்தி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ; அல்லது மென் பிரதி வடிவில் கணினி முறைமைக்கு பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும் ; அத்துடன் 20 இற்கும் குறைவான பதிவுகள் பதிவுசெய்யப்பட வேண்டியிருப்பின், அட்டவணைகள் இலத்திரனியல் சேவைகளினை அல்லது இணையத்தினைப் பயன்படுத்துவதன்க மூலம் பதிவேற்றம் செய்யப்படலாம் ; அல்லது வன் பிரதிகளாகவும் சமர்ப்பிக்கலாம்.

**7. ஊழியர் நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ்கள்.**- சட்டத்தின் 87 ஆம் பிரிவின் கீழ் ஊழியர் தொடர்பில் தொழில் வழங்குநரினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்ட நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழானது விதித்துரைக்கப்பட்ட வடிவத்தில் இருத்தல் வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றது :-

(i) ஊழியரின் பெயர், ஊழியர் இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ;

(ii) குறித்த ஊழியரின் தொழிலானது முதன்மைத் தொழிலா அல்லது இரண்டாம் நிலைத் தொழிலா என்பது பற்றிய விபரம் ;

(iii) குறித்த வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் தொழிலொன்றிலிருந்து ஊழியரினால் பெறப்படும் கொடுப்பனவுத் தொகை ;

(iv) கொடுப்பனவுகளிலிருந்து நிறுத்தி வைக்கப்படும் வரித் தொகை ; மற்றும்

**8. பொய்யான அல்லது தவறான கூற்று.**- சட்டத்தின் 181 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, இத்தகைய ஒழுங்குவிதிகளின் கீழ் ஊழியர் ஒருவரினால் தொழில் வழங்குநர் ஒருவருக்கு அல்லது தொழில் வழங்குநர் ஒருவரினால் ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படும் வெளிப்படுத்துகை, கூற்று அல்லது சான்றிதழானது வரி விதிப்பனவு அலுவலருக்கு விடுக்கப்பட்ட கூற்றாகக் கருதப்படும்.

**9. தொழில் வழங்குநர்கள் உரிய பதிவேடுகளினைப் பேணுதல்.**- எவரேனும் குறித்துரைக்கப்பட்ட ஊழியரொருவருக்கு ஏதேனும் உழைப்பூதியக் கொடுப்பனவினை மேற்கொள்கின்ற ஒவ்வொரு தொழில் வழங்குநரும் பின்வருவனவற்றினைப் பேணுதல் வேண்டும் :-

(அ) உபொசெவ கொடுப்பனவுத் தாளிற்கு அமைவாக (T6) அத்தகைய கொடுப்பனவுத் தாளில் அத்தகைய உழைப்பூதியக் கொடுப்பனவிற்கான உரிய பதிவேடுகளினைப் பேணுதல் ;

(ஆ) அனைத்து ஊழியர்களின் வெளிப்படுத்துகை, கொடுப்பனவுத் தாள்கள், ஊழியர்களின் வேதனக் கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் ஊழியர்களின் உழைப்பூதியத்துடன் தொடர்புடைய ஏனைய அனைத்துக் கணக்குப் பதிவேடுகள் மற்றும் கழிப்பனவு செய்யப்பட்ட மற்றும் ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்ட வருமான வரி என்பவற்றினைப் பாதுகாப்பாகப் பேணுவதற்குத் தேவையான அனைத்து நியாயமான முன்னேற்பாடுகளினையும் எடுத்தல் ;

(இ) அத்தகைய பதிவேடுகளுடன் தொடர்புடைய வரி மதிப்பாண்டொன்றின் இறுதியின் பின்னராக ஐந்து வருடங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்கு அத்தகைய அனைத்துப் பதிவேடுகளினையும் தொடர்ந்தும் பேணி வருதல் ;

(ஈ) பந்தி (அ) அல்லது (ஆ) அல்லது (இ) இல் குறித்துரைக்கப்பட்டு அவரினால் பேணப்படும் ஏதேனும் பதிவேட்டினை ஆய்வு செய்வதற்கு ஆணையாளர் நாயகத்தினால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினை அனுமதித்தல்.

5-53